மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 18/2021

பெயர் – பரந்தாமன் (வா.சா.3)

நாள் – 24.01.2024

பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் ஆடு மேய்க்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் வார வாரம் ஆட்டு இறச்சிக்காக ஆடு வெட்டுவது வழக்கம் என்றால் சரியல்ல. தீபாவளி, பொங்கலுக்கு மட்டுமே ஆடு வெட்டுவது வழக்கம். ஊர் பொது மக்கள் என்னிடம் ஆட்டு இறச்சி வாங்கி செல்வார்கள் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். பிரதிவாதிகளுக்கும் எனக்கும் பேச்சு வார்த்தை உண்டா என்றால் உண்டு. எனக்கு பிரதிவாதிகளுக்கும் எந்த பேச்சு வார்த்தையும் கிடையாது என்றால் சரியல்ல. உள்ளாட்சி தேர்தலில் நானும் பிரதிவாதிகளும் எதிர் எதிர் கட்சிகளுக்காக உழைத்தோம் என்றால் இல்லை. எதிர் எதிர் கட்சிகளுக்கு வேலை செய்ததாலும் என்னிடம் பிரதிவாதிகள் ஆட்டு இறச்சி வாங்காத காரணத்தினாலும், வாதிகளுடன் எனக்கு முன்விரோதம் உள்ளதால், இந்த வழக்கில் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சுந்தரராஜன் வீட்டிற்கு முன்பாக தென்வடல் சிமெண்ட் ரோடு உள்ளது என்றால் சரிதான். வாதியின் வீட்டு வாசல் கிழக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கு முன்புள்ள சிமெண்ட் ரோட்டை தாண்டி கிழக்குபுறத்தில் உள்ள காலியிடத்திற்கு அடுத்து தான் என் வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு பின்புறத்தில் எத்தனை வீடுகள் உள்ளன என்றால் 50 வீடுகள் இருக்கும். அந்த 50 வீடுகள் கழித்து கிழபுறம் தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து அந்த சிமெண்ட் ரோட்டிற்கு போய் வருவோம் என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கு முன் உள்ள தென்வடல் பாதை தெற்கு நோக்கி செல்கிறது என்றாலும், அந்த பாதையின் முடிவில் ஒரு பள்ளிக்கூடம் உள்ளது என்றால் சரிதான். அந்த தென்வடல் ரோட்டிலிருந்து கிழமேலாக சாலை உள்ளது என்றால் அது விவசாய நிலங்களுக்கு செல்லும் பாதை. வாதியின் வீட்டிலிருந்து தென்புறமாக சாலை சென்று அதிலிருந்து கிழமேலாக பிரிந்து செல்லும் சாலை வழியாக தான் விவசாய நிலத்திற்கு விவசாயிகள் சென்று வருகிறார்கள் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக

பிரதிவாதிகள் வீட்டிற்கு முன்புள்ள பிரதிவாதிகளின் நிலம் வழியாக விவசாயிகள் தங்களது விவசாய நிலத்திற்கு சென்று வருவதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வீட்டிற்கு முன்பாக ஒரு தென்வடல் பாதை உள்ளது என்றால் சரிதான். வாதியின் வீட்டின் தெற்புற ஜன்னல் வைத்து இரண்டு, மூன்று வருடங்கள் இருக்குமா என்றால் 30 வருடங்கள் இருக்கும். அந்த வீடு எவ்வளவு காலம் ஆகிறது என்றால் 30 வருடங்கள் இருக்கும். இந்த வழக்கிற்காக 30 வருடங்களுக்கு முன்பாக ஜன்னல் வைத்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் வீட்டிற்கு முன்பாக பாதை உள்ளதாக வாதி சொல்லும் இடத்தில் பிரதிவாதிக்கு சிமெண்ட் தளம் அமைத்துள்ளார்கள் என்றால் கொஞ்ச இடத்தில் அமைத்துள்ளார்கள். அந்த சிமெண்ட் தளத்திற்கு மேலே ஆஸ்பெட்டாஸ் சீட் அமைத்துள்ளார்கள் என்றால் சரிதான். வாதியின் இடத்திற்க்கான சர்வே எண் என்ன என்றால் 393/1 ஆகும். வாதி பாதையாக சொல்லும் இடத்திற்கான சர்வே எண் என்ன என்றால் பொது நத்தமாகும், சர்வே எண் தெரியாது. எந்த ஆவணத்தை பார்த்து நான் அது பாதை என்று சொல்கிறேன் என்றால் பாதையின் வடபுறம் வாதியின் வீடு உள்ளதாக பத்திரம் வாதி வைத்துள்ளார். ஆனால் வருவாய்துறை ஆவணங்களில் அவ்வாறு உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணத்தை நானே, வாதியோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேமா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை, வாதி தாக்கல் செய்திருப்பார். பத்திரத்தில் என்ன வேண்டுமானாலும் எழுதி கொள்ள முடியும் என்றால் சரியல்ல. அரசு ஆவணங்களில் அவ்வாறு எந்த பாதையும் இல்லை என்றாலும், வாதியின் பத்திரத்தில் வேண்டுமென்றே தவறாக பாதை உள்ளதாக வாதி காண்பித்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் வீட்டிற்கு தெற்குபுறத்தில் 100 ஆண்டுகள் பாதையுள்ளதாக நான் வாதி கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த பாதையின் நீளம், அகலம் என்ன என்றால் நீளம் தெரியவில்லை. ஏனெனில் அது விவசாய நிலம் வரை செல்கிறது. அகலம் 12 அடி ஆகும். வாதி எனக்கு உறவினர் என்பதாலும் பிரதிவாதிகளுக்கும் முன்விரோதம் உள்ளதாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை